*கவனிக்க.- 2019.07.05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2132 - 2019 ජූලි මස 12 වැනි සිකුරාදා - 2019.07.12

*2132 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1240 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) விடுமுறை நாட்கள் (திருத்தம்) சட்டமூலம், 2019, யூன் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) இலங்கைப் பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம், 2019, யூன் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2019, ஒகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூலை மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## திக்வெல்ல பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) (ஆ) பிரிவின் கீழ் அறிவித்தல்*

*தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் திக்வெல்ல பிரதேச சபையால் 1989 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 24(i) இன் படி கீழ் வரும் பாதை திக்வெல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையாக இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த அறிவிப்பை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் அதன் உரிமைகோரலை நிரூபிக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 24 (2) இன் படி செயல்படும்படி கேட்கப்படுகிறீர்கள்.*

*இந்த காலகட்டத்தில் இந்த அறிவிப்புக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் இவ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் திக்வெல்ல பிரதேச சபைக்கு சொந்தமான பாதைகள் என்று பொது மக்களுக்கு இதன்மூலம் அறிவிக்கிறேன்.*

*கித்ஸர முதுகுமாரன,*
*தலைவர்,*
*திக்வெல்ல பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*திக்வெல்ல,*
*2019, யூன் 21.*

**அட்டவணை**

| வரிசை எண் | பாதையின் பெயர் | பாதையின் ஆரம்பம் | பாதையின் முடிவு | பாதையின் நீளம் | பாதையின் அகலம் | பாதையின் வலது பக்கத்தில் நிலம் | பாதையின் இடது பக்கத்தில் நிலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சேனாதீர மாவத்தை | ரத்மலே பாதை | புதிய பெலியாட்டா பாதை | 500 m | 3 m - 3.5m | (1) திருமதி அமரா நாகசிங்கவின் நிலம்<br>(2) திருமதி D.W. தனுஜா சமந்தியின் நிலம்<br>(3) திருமதி D.W. காந்தியின் நிலம்<br>(4) திரு. லீலசேனாவின் நிலம்<br>(5) முஸ்லிம் சமூகம் குடியேறியுள்ளது | (1) திரு. M.G. சுகதபாலாவின் நிலம்<br>(2) திருமதி மதீனாவின் நிலம்<br>(3) திரு. S.G.A. மஞ்சுளாவின் நிலம்<br>(4) திரு D.W. லலித் ஜெயலத்தின் நிலம்<br>(5) திரு. N.T. அசோகா சேனா தீராவின் நிலம்<br>(6) முஸ்லிம் சமூகம் குடியேறியுள்ளது |

*07 - 259*

---

## யட்டிநுவர பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் யட்டிநுவர பிரதேச சபைக்குள் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் யட்டிநுவர பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகளென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இது பற்றி இப்பிரதேசத்தின் பொதுமக்கள் அல்லது பாதையுடன் சம்பந்தப்படும் காணி உரிமையாளர்கள் எவரும் இருப்பின், தமது உரித்துரிமையை அல்லது எதிர்ப்பைக் காட்ட வேண்டுமெனின் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் தமது உறுத்துரிமையை நிரூபிப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(2) ஆவது பிரிவின் படி செயற்படுமாறு அறிவிக்கப்படுகின்றது.*

இந்தக் கால எல்லைக்குள் இந்த அறிவித்தல் தொடர்பில் எதிர்ப்புகள் முன்வைக்கப்படவில்லையெனின், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் யட்டிநுவர பிரதேச சபைக்கு உரித்தான பாதைகளாகக் கொள்ளப்பட்டு நிரந்தரமாகப் பராமரிக்கப்பட்டு வரும் என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

ஆர். என். கே. ரூபஸ்ஸர,
தவிசாளர்,
யட்டிநுவர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யட்டிநுவர,
எம்பில்மீகம,
பிலிமதலாவ.

**அட்டவணை**

| தொடர் இல. | பாதையின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடதுபுறம் | வலதுபுறம் | நீளம் | அகலம் | நில வரை பட உறுதி இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | முருத்தலாவ வத்த இடைப் பாதை | தெஹிகம கிழக்கு | திரு. எச். டப்ளியூ. அமரசேகர இனது காணி அருகில் | திரு. டி.எம். திசாநாயக்க இனது காணி வரை | எச்.டப்ளியூ. அமரசேகர<br>கே.ஏ.கே. சமீர<br>டப்ளிவ்.டப்ளிவ்.ஆர். வீரசிங்ஹ<br>எச்.டப்ளிவ்.ஜீ. உபாலி<br>எச்.டப்ளிவ்.ஜீ.ஆர். சஞ்ஜய<br>எம்.ஜீ. குணரத்ன<br>டி.எம். திசாநாயக்க<br>ஐரின் பெரேரா<br>டி.எம். திசாநாயக்க<br>எச்.எம். திலக்கரத்ன | ஈ.என். ஜயரத்ன<br>ஜே. சில்வா<br>ரொஷான் திசாநாயக்க<br>ஏ.பி. செனவிரத்ன<br>துஷாந்த மெதகெதர | 138 மீ. | 07 அடி | 4922 |
| 02 | அங்கம் மெடில்ல பாதை | உட ரத்மீவல | அங்கம் மெடில்ல | தெல்தெனிய ருக்கஹ கொட்டுவ பாதை | எச். குணவங்ஸ<br>எச். சந்திரசிரி<br>எச். ஜயசேன<br>எஸ்.என். திலக்கரத்ன<br>எஸ்.பீ. ஆரியவதி<br>எச். எல்பர்ட் திலக்கரத்ன<br>எஸ்.பீ. மாலனி | எச். சரத்சந்திர<br>எச். வீரசூரிய<br>ரீ. மல்ஷா குமாரி<br>அனுர சாந்த<br>என்.பீ. குணவங்ஸ<br>என்.பீ. குணவங்ஸ<br>என்.பீ. குணவங்ஸ | 500 மீ. | 2.45 மீ. | 4465 |

07-315

---

**மாவனல்லை பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) மற்றும் 24(2) ஆம் உறுப்புரையின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) உறுப்புரையின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தின் மாவனல்லை பிரதேச சபையினால் இங்கு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள் மாவனல்லை பிரதேச சபைக்கு உரியவையென இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

*தற்போது பிரதேச சபையினால் அளவையிடப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ள இந்தப் பாதைகள் தொடர்பாக, குறிப்பிட்ட காணிகளின் உரிமையாளர்கள் என உரிமை கோருவோர்களின் மூலம் ஏதேனும் எதிர்ப்புக்கள் விடுக்கப்படுமாயின் இந்த அறிவித்தல் தினத்திலிருந்து ஒரு மாதத்திற்கு முன் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படுதல் வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றோம்.*

*எச்.பி.சீ.கே. ஜயவன்தல,*
*தலைவர்,*
*மாவனல்லை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*மாவனல்லை,*
*2019, யூன் 24.*

**அட்டவணை 01**

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | தென்னேகெதரவத்த பாதை |
| பாதையின் ஆரம்பம் | : | மெடேரிகம பாதை |
| பாதையின் முடிவு | : | தென்னேகெதரவத்த காணியின் இறுதி வரை |
| கிராம அதிகாரிப் பிரிவு | : | ருகுலகம 27 B |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம்: 87.6785 மீற்றர் அகலம்: 3.05 மீற்றர் |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்.

| | | உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | திரு. | ஜீ.வீ.ஏ.எஸ்.எம். பெரேரா | தென்னேகெதரவத்த |
| 2. | திரு. | ஏ.எம்.பீ.கே. ஹேரத் | தென்னேகெதரவத்த |
| 3. | திரு. | கே.ஆர். அமரசிங்க | தென்னேகெதரவத்த |
| 4. | திரு. | என். எதிரிசிங்க | தென்னேகெதரவத்த |
| 5. | திருமதி | டப்ளியூ.ஏ.எல். ரேணுகா குமாரி | தென்னேகெதரவத்த |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்.

| | | உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | திரு. | எச்.ஆர். புன்சி பண்டா | அங்கிலிவிடியே அட்டிக்காகஹமுலவத்த |
| 2. | திரு. | ஜீ.வீ.ஏ.எஸ்.எம். பெரேரா | தென்னேகெதரவத்த |
| 3. | திரு. | டீ.ஏ.வீ. குணவர்தன | தென்னேகெதரவத்த |
| 4. | திரு. | ஆர். டப்ளியூ. எஸ்.டீ. விஜேசிங்க | தென்னேகெதரவத்த |
| 5. | திருமதி | ஆர். டப்ளியூ. ஜீ. பொடிமெணிகே | தென்னேகெதரவத்த |

07 - 355

## வேலணை பிரதேச சபை

### வேலணை பிரதேச சபைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பிரதேசங்களை கட்டமைந்த இடப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் வேலணை பிரதேச சபை எல்லையினுள் அமைந்துள்ளதும் கீழ்க்காணும் அட்டவணையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளதுமான கிராமங்களை கட்டமைந்த இடப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்துவதென 2019 ஆம் ஆண்டின் மே மாதம் 09 ஆந் திகதிய 02 ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் வேலணை பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பிரதேச சபைகள் உருவாக்கப்படமுன் வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, மண்டைதீவு, அல்லைப்பிட்டி கிராம சபைகள் என பிரதேச சபையின் பிரதேசங்கள் கட்டமைந்த பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு இருந்த அறிவித்தல்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டு அவற்றுக்குப் பதிலாக கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு வேலணை பிரதேச சபையின் பிரதேசங்கள் கட்டமைந்த பிரதேசங்கள் என 01.07.2019 ஆந் திகதியில் இருந்து செயற்படும் வண்ணம் மேற்படி சட்டத்தின் பிரகாரம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் யாழ்ப்பாண நிருவாக மாவட்டத்தின் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் முருகநேசன் சுலோச்சனா ஆகிய நான் அங்கீகாரம் வழங்கி இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

முருகநேசன் சுலோச்சனா,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,

*பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2019, யூன் 12.*

**அட்டவணை**

| தொ. இல | கிராம அலுவலர் பிரிவு | கி.அ பிரிவு இல | வட்டாரங்களின் விபரம் | அளவு சதுரகிலோ மீற்றரில் | கிராமங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| 1 | மண்டைதீவு கிழக்கு | ஜே-07 | 1,2,3 | 6.3 | 3 | மண்டைதீவு கிழக்கு, சிறு தீவு, குருச்சடித்தீவு |
| 2 | மண்டைதீவு மேற்கு | ஜே-08 | 7,8 | 8.1 | 1 | மண்டைதீவு மேற்கு |
| 3 | மண்டைதீவு தெற்கு | ஜே-09 | 4,5,6 | 0.7 | 1 | மண்டைதீவு தெற்கு |
| 4 | அல்லைப்பிட்டி | ஜே-10 | 1,2,3 | 3.8 | 1 | அல்லைப்பிட்டி |
| 5 | மண்கும்பான் | ஜே-11 | 4,5 | 4.8 | 2 | மண்கும்பான் மேற்கு, மண்கும்பான் கிழக்கு |
| 6 | வேலணை வடக்கு | ஜே-12 | 5 | 4 | 5 | வங்களாவடி, பள்ளம்புலம், சோழாவத்தை, மயிலம்புலம், சங்குத்துறை |
| 7 | வேலணை வடகிழக்கு | ஜே-13 | 1 | 2.5 | 3 | அராலிவெளி, சாட்டி, செட்டிபுலம் |
| 8 | வேலணை கிழக்கு | ஜே-14 | 4 | 2.5 | 2 | துறையூர் அம்மன்கோவிலடி |
| 9 | வேலணை தென்கிழக்கு | ஜே-15 | 3 | 2.5 | 2 | தேவி கோட்டம் செட்டிபுலம் |
| 10 | வேலணை மத்திகிழக்கு | ஜே-16 | 2 | 2.5 | 2 | வேலணை கிழக்கு மத்தி செட்டிபுலம் |

| தொ. இல | கிராம அலுவலர் பிரிவு | கி. அ பிரிவு இல | வட்டாரங்களின் விபரம் | அளவு சதுரகிலோ மீற்றரில் | கிராமங்களின் எணணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| 11 | வேலணை தெற்கு | ஜே-17 | 6 | 4.5 | 5 | வங்களாவடி, சிற்பனை, திருவள்ளுவர் கிராமம், துறையூர் தெற்கு, கண்ணாபுரம் |
| 12 | வேலணை மத்திமேற்கு | ஜே-18 | 7 | 3 | 2 | வேலணை மேற்கு மத்தி, அம்பிகைநகர், (பகுதி) |
| 13 | வேலணை மேற்கு | ஜே-19 | 8 | 3 | 2 | வேலணை மேற்கு, அம்பிகைநகர், (பகுதி) |
| 14 | சரவணை கிழக்கு | ஜே-20 | 9 | 5.2 | 1 | சரவணை கிழக்கு |
| 15 | சரவணை மேற்கு | ஜே-21 | 1,2 | 3 | 3 | தேவிபுரம், சின்னமடு, மொன்கனைப்புலம் |
| 16 | புங்குடுதீவு வடக்கு மேற்கு | ஜே-22 | 7 | 1.4 | 2 | ஊரதீவு, வரதீவு |
| 17 | புங்குடுதீவு கிழக்கு | ஜே-23 | 8 | 4 | 3 | மடத்துவெளி, கம்பிளியன், பல்லக்காடு |
| 18 | புங்குடுதீவு தென்கிழக்கு | ஜே-24 | 9 | 1 | 2 | மடத்துவெளி, வல்லன் |
| 19 | புங்குடுதீவு கிழக்கு தெற்கு | ஜே-25 | 10,11,12 | 4.4 | 3 | கண்ணகைபுரம், தெங்குதிடல், குறிச்சிக்காடு கிழக்கு |
| 20 | புங்குடுதீவு தெற்கு | ஜே-26 | 10,11,12 | 3.1 | 3 | கோட்டைக்காடு, குறிச்சிக்காடு, மேற்குக்கல்லடி |
| 21 | புங்குடுதீவு வடக்கு | ஜே-27 | 4 | 2.8 | 3 | இறுப்பிட்டி, மானாவெல்லை சிவலைப்பிட்டி |
| 22 | புங்குடுதீவு மத்தி வடக்கு | ஜே-28 | 1 | 1.5 | 3 | வடக்கு பெருங்காடு, கரந்தளி, பரந்தத்தோட்டம் |
| 23 | புங்குடுதீவு தென்மேற்கு | ஜே-29 | 3 | 3.1 | 3 | சங்கத்தார்கேணி, நடுவுத்திருத்தி, குறிகட்டவான் |
| 24 | புங்குடுதீவு மத்தி மேற்கு | ஜே-30 | 3 | 2.1 | 1 | பெருங்காடு தெற்கு |
| 25 | புங்குடுதீவு மத்தி கிழக்கு | ஜே-31 | 2 | 2.8 | 1 | புங்குடுதீவு மத்தி கிழக்கு |
| 26 | புங்குடுதீவு வடமேற்கு | ஜே-32 | 6 | 4 | 2 | இறுப்பிட்டி, கழுதைப்பிட்டி |
| 27 | புங்குடுதீவு மேற்கு | ஜே-33 | 4,5 | 2.5 | 3 | நுணக்கல், கேரதீவு, பெரியபுலம் |
| 28 | நயினாதீவு வடக்கு | ஜே-34 | 1,2,3,4 | 2.5 | 3 | தம்பகைப்பதி, வல்லிக்காடு, இரட்டைக்காளி |
| 29 | நயினாதீவு மத்தி | ஜே-35 | 5 | 1.5 | 3 | நடுவக்காடு, வெள்ளைப்பட்டு மணல்தரை, கிழக்குக்காடு |
| 30 | நயினாதீவு தெற்கு | ஜே-36 | 6,7,8 | 1.5 | 3 | வங்களாவடி, மலையடி கத்தியாக்குடா |

## பருத்தித்துறை நகர சபை

*1952 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் (நியமத் துணை விதிகள்) சட்டம்.*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (அத்தியாயம் 261) உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (2) (அ) உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2019 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி பருத்தித்துறை நகரசபையால் கீழ்க் கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

யோசேப்பு இருதயராசா,
தவிசாளர்,
பருத்தித்துறை நகரசபை.

பருத்தித்துறை நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
2019, யூன் 19.

### C79/2019 ஆம் இலக்க 2019.05.28 ஆந் திகதிய தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது விதியின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்(1) ஆவது உப பிரிவின் கீழ் வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் படி வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2018.05.09 ஆந் திகதிய 2070/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு வடக்கு மாகாண சபையால் 2018.09.11 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2018.10.08 ஆந் திகதிய 2092/6 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் 4 (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான அத்தியாயம் 7 தொடக்கம் 9 வரையான வடக்கு மாகாண நகரசபைகளுக்கான துணைவிதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வது என்றும் பருத்தித்துறை நகரசபை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்துவது என்றும் மேலே கூறப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (அத்தியாயம் 261) நியமத் துணைவிதிகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (2)(அ) உப பிரிவின் கீழ் பருத்தித்துறை நகரசபை தீர்மானிக்கின்றது.*

7 - 401/1

---

## பருத்தித்துறை நகர சபை

*1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 அத்தியாயம்) 44, 46 மற்றும் 49 ஆம் பிரிவிற்கு அமைவாக விடுக்கப்படும் அறிவித்தல்*

**தீர்மான இல.** C91/2019.05.28

*1989 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 அத்தியாயம்) 44, 46, மற்றும் 49 ஆம் பிரிவின் பிரகாரம் வடமாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள பருத்தித்துறை நகரசபையால் 2017.12.29 ஆந் திகதிய 2052 ஆம் இலக்க, 2019.03.22 ஆந் திகதிய 2116 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாதைகள், வீதிகள் சம்பந்தமாக குறித்த கால எல்லைக்குள் எவ்விதமான மறுதலிப்புக்களும் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக சிறு திருத்தங்களுடன் மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது. குறித்த பாதைகள் மற்றும் வீதிகள் அனைத்தும் பருத்தித்துறை நகரசபைக்கு உரித்தானவை என ஏற்று நிர்வகிக்கப்படுகின்றது என்பதை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

யோசேப்பு இருதயராசா,
தவிசாளர்,
பருத்தித்துறை நகரசபை.

பருத்தித்துறை நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
2019, யூன் 19.

## அட்டவணை

| வீதியின் இல. | வீதியின் பெயர் | கி. அ. பிரிவு | கி. அ. பி. இல. | பயன்படுத்தப் படுகின்ற வேறு பெயர்கள் | வீதி ஆரம்பம் | வீதி முடிவு | வீதியின் நீளம் (M) | வட்டாரம் | வீதியின் சராசரி அகலம் (M) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| NJPUE130 | ஐயனார்கலட்டி முதலாம் ஒழுங்கை | பருத்தித்துறை தெற்கு | J/402 | | ஐயனார்கலட்டி வீதி | ஐயனார்கலட்டி வீதி | 335 | 8 | 4.0 |
| NJPUE131 | ஓடை வீதி | புலோலி வடக்கு | J/407 | | கலாமன்ற வீதி | பெருந்தெரு | 218 | 7 | 4.5 |
| NJPUE132 | பத்திரகாளி அம்மன் வீதி, முதலாம் ஒழுங்கை | பருத்தித்துறை | J/401 | | பத்திரகாளி அம்மன் வீதி | ஆதன இல. 8/5 | 50 | 2 | 3.0 |
| NJPUE133 | பத்திரகாளி அம்மன் வீதி, இரண்டாம் ஒழுங்கை | பருத்தித்துறை | J/401 | | பத்திரகாளி அம்மன் வீதி | ஆதன இல. 23/22 | 92 | 2 | 3.0 |
| NJPUE134 | விநாயக முதலியார் வீதி, முதலாம் ஒழுங்கை | பருத்தித்துறை | J/401 | சின்னப் பிள்ளையார் தெற்கு ஒழுங்கை | விநாயக முதலியார் வீதி | ஆதன இல. 66/18 | 125 | 2 | 3.0 |
| NJPUE135 | விநாயக முதலியார் வீதி, இரண்டாம் ஒழுங்கை | பருத்தித்துறை தெற்கு | J/402 | | விநாயக முதலியார் வீதி | ஆதன இல. 80/8 | 90 | 8 | 3.0 |
| NJPUE136 | ஓடக்கரை வீதி முதலாம் ஒழுங்கை | பருத்தித்துறை தெற்கு | J/402 | | ஓடக்கரை வீதி | ஆதன இல. 24/9 | 105 | 1 | 4.0 |
| NJPUE137 | ஓடக்கரை வீதி இரண்டாம் ஒழுங்கை | பருத்தித்துறை தெற்கு | J/402 | | ஓடக்கரை வீதி | ஆதன இல. 27/6 | 60 | 1 | 3.0 |
| NJPUE138 | மாதர்சங்க வீதி | பருத்தித்துறை தெற்கு | J/402 | | ஆத்தியடி வீதி | பருத்தித்துறை தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் | 65 | 8 | 3.0 |
| NJPUE139 | நாகலிங்க முதலியார் வீதி முதலாம் ஒழுங்கை | பருத்தித்துறை தெற்கு | J/402 | | நாகலிங்க முதலியார் வீதி | ஆதன இல. 51/4 | 50 | 8 | 3.0 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *வீதியின் இல.* | *வீதியின் பெயர்* | *கி. அ. பிரிவு* | *கி. அ. பி. இல.* | *பயன்படுத்தப் படுகின்ற வேறு பெயர்கள்* | *வீதி ஆரம்பம்* | *வீதி முடிவு* | *வீதியின் நீளம் (M)* | *வட்டாரம்* | *வீதியின் சராசரி அகலம் (M)* |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| NJPUE140 | நாகலிங்க முதலியார் வீதி இரண்டாம் ஒழுங்கை | பருத்தித்துறை தெற்கு | J/402 | | நாகலிங்க முதலியார் வீதி | ஆதன இல. 61/7 | 70 | 8 | 3.0 |
| NJPUE141 | பூதவராயர் வீதி முதலாம் ஒழுங்கை | பருத்தித்துறை தெற்கு | J/402 | | பூதவராயர் வீதி | ஆதன இல. 7/10 | 55 | 8 | 3.0 |
| NJPUE142 | பூதவராயர் வீதி இரண்டாம் ஒழுங்கை | பருத்தித்துறை தெற்கு | J/402 | | பூதவராயர் வீதி | ஆதன இல. 25/11 | 31 | 8 | 3.0 |
| NJPUE143 | திகிரி வீதி முதலாம் ஒழுங்கை | தும்பளை | J/404 | கோந்தரம்பற்றை வீதி | திகிரி வீதி | ஆதன இல. 61/10 | 125 | 6 | 3.0 |
| NJPUE144 | சாஸ்திரியார் வீதி மூன்றாம் ஒழுங்கை | தும்பளை | J/404 | | சாஸ்திரியார் வீதி | ஆதன இல. 7/12 | 164 | 6 | 3.0 |
| NJPUE145 | நெல்லண்டை வீதி ஏழாம் ஒழுங்கை | தும்பளை | J/404 | | நெல்லண்டை வீதி | ஆதன இல. 170/11 | 70 | 6 | 3.0 |
| NJPUE146 | திகிரி வீதி இரண்டாம் ஒழுங்கை | தும்பளை | J/404 | | திகிரி வீதி | அரும்புகள் முன்பள்ளி | 73 | 6 | 4.0 |
| NJPUE147 | முத்துமாரி அம்மன் கோவில் வீதி முதலாம் ஒழுங்கை | தும்பளை கிழக்கு | J/405 | | முத்துமாரி அம்மன் கோவில் வீதி | முத்துமாரி அம்மன் கோவில் வீதி | 115 | 5 | 3.0 |
| NJPUE148 | நெல்லண்டை கிழக்கு வீதி முடிவு ஒழுங்கை | தும்பளை கிழக்கு வீதி | J/405 | | நெல்லண்டை கிழக்கு வீதி | ஆதன இல. 69/32 | 86 | 5 | 3.0 |
| NJPUE149 | தோட்டக்கடவை வைரவர் கோவில் வீதி முதலாம் ஒழுங்கை | தும்பளை கிழக்கு | J/405 | | தோட்டக்கடவை வைரவர் கோவில் வீதி | ஆதன இல. 40/08, 40/27 | 196 | 5 | 4.0 |
| NJPUE150 | உதயசூரியன் மூன்றாம் ஒழுங்கை | தும்பளை கிழக்கு | J/405 | | உதயசூரியன் வீதி | உதயசூரியன் இரண்டாம் ஒழுங்கை | 230 | 5 | 4.0 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *வீதியின் இல.* | *வீதியின் பெயர்* | *கி. அ. பிரிவு* | *கி. அ. பி. இல.* | *பயன்படுத்தப் படுகின்ற வேறு பெயர்கள்* | *வீதி ஆரம்பம்* | *வீதி முடிவு* | *வீதியின் நீளம் (M)* | *வட்டாரம்* | *வீதியின் சராசரி அகலம் (M)* |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| NJPUE151 | உதயசூரியன் மூன்றாம் ஒழுங்கை கிளை வீதி | தும்பளை கிழக்கு | J/405 | | உதயசூரியன் மூன்றாம் ஒழுங்கை | ஆதன இல. 24/18 | 194 | 5 | 3.0 |
| NJPUE152 | கல்லடி வீதி முதலாம் ஒழுங்கை | புலோலி வடக்கு | J/407 | | கல்லடி வீதி | ஆதன இல. 25/5 | 88 | 7 | 3.0 |
| NJPUE153 | வீரபத்திரகோவில் வீதி முதலாம் ஒழுங்கை | புலோலி வடக்கு | J/407 | | வீரபத்திரகோவில் வீதி | ஆதன இல.30/12, 30/34 | 195 | 7 | 3.0 |
| NJPUE154 | ஓடை வீதி முதலாம் ஒழுங்கை | புலோலி வடக்கு | J/407 | | ஓடை ஒழுங்கை | ஆதன இல. 27/08 | 110 | 7 | 4.5 |
| NJPUE155 | வோல்டன் பிளேஸ் வீதி | தும்பளை கிழக்கு | J/405 | | கிழக்கு கடற்கரை வீதி | உதயசூரியன் வீதி | 650 | 5 | 6.0 |
| NJPUE156 | மன்னன் தோட்டம் வீதி | புலோலி வடக்கு | J/407 | | பெருந்தெரு | ஆதன இல. 70/26 | 151 | 7 | 4.0 |
| NJPUE157 | கந்தவுடையார் வீதி இரண்டாம் ஒழுங்கை | புலோலி மத்தி | J/409 | | கந்தவுடையார் வீதி | ஆதன இல. 36/11 | 92 | 9 | 4.0 |
| NJPUE158 | சுப்பர்மடம் வீதி முதலாம் ஒழுங்கை | பருத்தித்துறை | J/401 | | பருத்தித்துறை பொன்னாலை | ஆதன இல. 73/07 | 67 | 1 | 4.0 |
| NJPUE159 | சுப்பர்மடம் வீதி இரண்டாம் ஒழுங்கை | பருத்தித்துறை | J/401 | | பருத்தித்துறை பொன்னாலை | ஆதன இல. 83/02 | 40 | 1 | 4.0 |
| NJPUE160 | துரைதோட்டம்-தம்புருவளை இணைப்பு வீதி | பருத்தித்துறை கிழக்கு | J/403 | | துரைதோட்டம் வீதி | தம்புருவளை பிள்ளையார் வீதி | 180 | 4 | 4.5 |
| NJPUE161 | தோட்டக்காணி வீதி | தும்பளை கிழக்கு | J/405 | | கிழக்கு கடற்கரை வீதி | தனியார் ஆதனம் | 222 | 5 | 4.0 |
| NJPUE162 | தும்பளை கிழக்கு உடையார் ஒழுங்கை 1 ஆம் குறுக்குவீதி | தும்பளை கிழக்கு | J/405 | | உடையார் ஒழுங்கை | வக்கமேட்டு ஒழுங்கை | 211 | 5 | 4.5 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *வீதியின் இல.* | *வீதியின் பெயர்* | *கி. அ. பிரிவு* | *கி. அ. பி. இல.* | *பயன்படுத்தப் படுகின்ற வேறு பெயர்கள்* | *வீதி ஆரம்பம்* | *வீதி முடிவு* | *வீதியின் நீளம் (M)* | *வட்டாரம்* | *வீதியின் சராசரி அகலம் (M)* |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| NJPUE163 | தும்பளை கிழக்கு உடையார் ஒழுங்கை 2 ஆம் குறுக்குவீதி | தும்பளை கிழக்கு | J/405 | | உடையார் ஒழுங்கை | வக்கமேட்டு ஒழுங்கை | 215 | 5 | 4.5 |
| NJPUE164 | அவ்வொல்லை பிள்ளையார் பின் வீதி | புலோலி மத்தி | J/409 | | நாவலடி வீதி | தனியார் ஆதனம் | 160 | 9 | 4.0 |
| NJPUE165 | ஐயனார் கலட்டி வீதி 2ஆம் ஒழுங்கை | பருத்தித்துறை தெற்கு | J/402 | | ஐயனார் கலட்டி வீதி | ஐயனார் கலட்டி 1ஆம் ஒழுங்கை | 133 | 8 | 3.0 |
| NJPUE166 | தாமரைக்குளத்தடி தெற்கு வீதி | பருத்தித்துறை தெற்கு | J/401 | | கல்லூரி வீதி | தனியார் ஆதனம் | 105 | 2 | 3.0 |
| NJPUE167 | நெல்லண்டை கிழக்கு வீதி 1ஆம் ஒழுங்கை | தும்பளை கிழக்கு | J/405 | பலாலி வீட்டுத்திட்ட பாதை | நெல்லண்டை அம்மன் வீதி | தனியார் ஆதனம் | 88 | 5 | 3.0 |

## சீத்தவக்கபுர நகர சபை

*(255 ஆவது அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் கட்டத்தின் III ஆவது பிரிவின் 44(1) மற்றும் 46 ஆவது பிரிவின்
கீழே செய்யப்படும் அறிவித்தல்*

*01.* *(255 ஆவது அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் கட்டத்தின் III ஆவது பிரிவின் 44(1) மற்றும் 46 ஆவது பிரிவுகளின் பிரகாரம் மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் சீத்தாவக்கபுர நகர சபையினால் கீழ்க் குறிப்பிடப்படும் அளவீடு இலக்கம் 2018/ 4522 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாதை சீத்தாவக்கப்புர நகர சபைக்குரிய பாதையாக பிரதிக்கினைப்படுத்துவதற்காக எதிர்ப்பினை அழைப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*02.* *அளவீட்டின் இலக்கம் 2018/4522 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பாதை சீத்தாவக்கப்புர நகர சபைக்குரிய பாதையாக பிரகடனப்படுத்துவதற்கு 2019.05.17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் IV (ஆ) பிரிவின் மூலம் எதிர்ப்பு கோரப்பட்டிருந்தாலும் இந்த பாதை சம்பந்தமாக உரிய காணி உரிமையாளராக உரிமை கோரும் திறத்தவரினால் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை.*

*03.* *ஆகையினால் கீழ்க் குறிப்பிடப்படும் பாதை சீத்தாவக்கபுர நகர சபைக்குரிய பாதையாக ஏற்றுக் கொண்டு நிருவகிக்கப் படுவதாக பொது மக்கள் அறிந்துக் கொள்வதற்காக இத்தால் அறிவிக்கின்றேன்.*

| அளவீட்டின் இலக்கம் மற்றும் திகதி | பாதையின் பெயர் | பாதையின் வர்க்க அளவு | கிராம அலுவலர் பிரிவு | பாதையின் அகலம் ( அளவீட்டின் பிரகாரம்) | அட்டவணையின் பிரகாரம் எல்லைகள் |
|---|---|---|---|---|---|
| 2018/4522<br>2018.11.06 | கிரிவந்தல 500 வீடுகள் R-11 பாதை | 0.0822 ஹெக் டேயார் (32.5 பேர்ச்) | 431- B, கிரிவந்தல, வடக்கு | 4.5 மீற்றர் தொடக்கம் 6.0 மீற்றர் வரை | வடக்கு : 1854 அளவீட்டின் காணித்துண்டு இலக்கம் B38- B 44, கால்வாய் மற்றும் காணித்துண்டு இலக்கம் 45 ;<br>கிழக்கு : 1854 அளவீட்டின் காணித்துண்டு இலக்கம் R 1, B 33, B 34 ;<br>தெற்கு : 1854 அளவீட்டின் காணித்துண்டு இலக்கம் B 24, B 29, B 12, B 32, B 33, 2014/191 அளவீட்டின் காணித்துண்டு இலக்கம் A ;<br>மேற்கு : 2013/209 அளவீட்டின் காணித்துண்டு இலக்கம் A மற்றும் 1854 அளவீட்டின் காணித்துண்டு இலக்கம் 36 மற்றும் 37. |

ரணவீர குருகல ஆரச்சி,
தலைவர்,
சீத்தாவக்கபுர நகர சபை,
அவிசாவளை.

நகர சபை அலுவலகம்,
சீத்தாவக்கபுர,
2019, யூலை 01.

7 - 484

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.